# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2008*, பெப்புருவரி மாதம் *29* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2008 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்**

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ. ஒ. 3/2008

**2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**1.** (1) இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2008 ஆம் ஆண்டு சனவரி 1ஆம் தேதியன்று எல்லா நோக்கங்களுக்கும் வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*2006 ஆம் ஆண்டின் 51ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** 2007 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டை விதிப்பனவு செய்தல்.*

2. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத் தொன்பதாம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் உற்பத்தித் தீர்வையை செலுத்தும் பொறுப்புடையதும் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் இசைவாக்கப்பட்ட குறியீட்டு இலக்க முறைமையின் கீழ் வருகின்றதும், அத்துடன் அவ்வட்டணையில் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் சிலிண்டர் கொள்ளளவு, ஆசன கொள்ளளவு அல்லது எடையொன்றை கொண்டுள்ளதுமான ஏதேனும் மோட்டார் வாகனம் மீது (இதனகத்துப் பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு

2-PL 002817 -1400 (2008/02)

எனவழைக்கப்படுவதும், இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை உ இன் நியதிகளின்படி தீர்மானிக்கப்பட்ட அத்தகைய மோட்டார் வாகனங்களின் சுங்கப் பெறுமதியும் அவற்றின்மீது அறவிடப்படும் எல்லா வரிகளும், தீர்வைகளும் அறவீடுகளும் அடங்கிய கூட்டு மொத்தப் பெறுமதியின் மீதான அவ்வட்டணையின் III ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் வீதத்தில் கணக்கிடப்பட்ட தொகையொன்றாகவுள்ளதுமான அறவீடொன்று இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் இறுக்கப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "மோட்டார் வாகனம்" என்னும் சொல்லமைப்பு உந்து விசை மோட்டார் முச்சக்கரவண்டியை உள்ளடக்காது.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு அட்டவணையொன்றைச் சேர்த்தல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கம், அதன் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் அட்டவணையைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"**அட்டவணை**

| இல. | நிரை I<br>எச். எஸ். குறிப்பீடு இல. | நிரை II<br>சிலிண்டர் கொள்ளளவு/ ஆசன கொள்ளளவு/ எடை | நிரை III<br>வீதம் |
|---|---|---|---|
| 01 | 8703 | 1600 ஜ விஞ்சாத சிலிண்டர் கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 5.0 சதவீதம் |
| 02 | 8703 | 1600 ஜ விஞ்சியதும் 2000 ஜ விஞ்சாததுமான சிலிண்டர் கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 7.5 சதவீதம் |

| | | | |
|---|---|---|---|
| 03 | 8703 | 2000 ஐ விஞ்சிய சிலிண்டர் கொள்ளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 10 சதவீதம் |
| 04 | 8702 | 13 ஆட்களுக்குக் குறைவான ஆசன கொள்ளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 10 சதவீதம் |
| 05 | 8702 | 13 ஆட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட ஆனால் 17 ஆட்களுக்குக் குறைவான ஆசன கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 5.0 சதவீதம் |
| 06 | 8702 | 17 ஆட்களுக்கான அல்லது அதற்கு மேற்பட்ட ஆசன கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 7.5 சதவீதம் |
| 07 | 8704 | மோட்டார் வாகனம் (குறித்துரைக் கப்பட்ட எடையை உடைய) | 5.0 சதவீதம்” |

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*